அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 07/2025

எனது இலக்கம் : EST-7/05/ALW/1009

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.03.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் அதனை ஒத்த ஏனைய நடவடிக்கைகளை வழிநடாத்தும் வளவாளர்களுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல்

அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக நடைபெறும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் அத்தகைய முறையில் வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் வளவாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வளவாளர்களுக்கான கொடுப்பனவு செலுத்துதல் பொதுவான முறைமையின்படி செய்வதை நோக்கமாகக் கொண்டு 2025.03.01 ஆம் தினத்திலிருந்து வலுவாகும்படி இவ் சுற்றறிக்கை ஆலோசனைகள் வெளியிடப்படுகின்றன.

02. முறையான அதிகார பலத்துடன் அரசாங்க நிறுவனங்களில் நடாத்தப்படும் மேற்படியான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வளவாளர்களாக செயற்படும் அரசாங்க தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு கீழ்வரும்படி கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும்.

| | பதவி | அனுமதிக்கப் பட்ட கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு ரூ.) |
|---|---|---|
| 01. | அமைச்சுக்களின் செயலாளர்கள்/ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சிரேஸ்ட பேராசிரியர்கள்/ பேராசிரியர்கள் | 2400/- |
| | இலங்கை நிர்வாகச் சேவை மற்றும் அதற்கு சமமான நாடளாவிய சேவைகளின் விசேட தர உத்தியோகத்தர்கள்/ திணைக்கள பதவிநிலை சேவைகள் தொகுதியின் விசேட தரத்தின் உத்தியோகத்தர்கள் | |

| | பதவி | அனுமதிக்கப் பட்ட கொடுப்பனவு (மணித்தியாலத்திற்கு ரூ.) |
|---|---|---|
| 02. | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் | 2000/- |
| | இலங்கை நிர்வாகச் சேவை மற்றும் அதற்கு சமமான நாடளாவிய சேவைகளின் தரம் I இன் உத்தியோகத்தர்கள்/ இணைந்த சேவைகளின் பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் I இன் உத்தியோகத்தர்கள்/ திணைக்கள பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் II இன் உத்தியோகத்தர்கள் | |
| | தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதற்கு சமமான கல்வி நிறுவனங்களில் பணிப்பாளர் அல்லது மேலான பதவி வகிப்பவர்கள் | |
| | ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்கள் | |
| 03. | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விரிவுரையாளர்கள் | 1800/- |
| | இலங்கை நிர்வாகச் சேவை மற்றும் அதற்கு சமமான நாடளாவிய சேவைகளின் தரம் II இன் உத்தியோகத்தர்கள்/ இணைந்த சேவைகளின் பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் II இன் உத்தியோகத்தர்கள்/ திணைக்கள பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் II இன் உத்தியோகத்தர்கள் | |
| | தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதற்கு சமமான கல்வி நிறுவனங்களில் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் | |
| | ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் II இன் உத்தியோகத்தர்கள் | |
| 04. | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தகுதிகாண் விரிவுரையாளர்கள் | 1600/- |
| | இலங்கை நிர்வாகச் சேவை மற்றும் அதற்கு சமமான நாடளாவிய சேவைகளின் தரம் III இன் உத்தியோகத்தர்கள்/ இணைந்த சேவைகளின் பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் III இன் உத்தியோகத்தர்கள்/ திணைக்கள பதவிநிலை சேவைகள் தொகுதியின் தரம் III இன் உத்தியோகத்தர்கள் | |
| | தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதற்கு சமமான கல்வி நிறுவனங்களில் சிரேஸ்ட விரிவுரையாளர்கள் | |
| | ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்கள் | |
| 05. | மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளை வகிக்காத பட்டதாரிகள் | 1400/- |
| 06. | ஏனைய தகைமைகளை உடைய விரிவுரையாளர்கள் | 1200/- |

03. மேலே உள்ள சட்டகத்தில் **"அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்"** என்பது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமாகும்.

04. மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தும் போது கீழ்வரும் நிபந்தனைகள் பொருந்தும்.

<u>**நிபந்தனைகள்**</u>

I. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் அத்தகைய வடிவிலான பிற நிகழ்ச்சித்திட்டங்களில் வளப் பங்களிப்பு வழங்கும் வளவாளர்களுக்காக இவ் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் உரித்தாவதுடன், கற்பித்தல் மற்றும் பயிற்சி வழங்கலை நடாத்துதல் தமது பிரதான கடமையாக கொண்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இவ் சுற்றறிக்கையினை உரித்தாக்கிக் கொள்ளக் கூடாது.

II. ஒரு வளவாளருக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சம் 03 மணித்தியாலங்கள் மட்டும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும் . கீழ்வரும் IIIஇல் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களை தவிர, 03 மணித்தியாலங்களை விடவும் அதிகபட்ச காலத்தினை தாண்டி உரிய விரிவுரைகள் நடைபெற்றால், கொடுப்பனவு செலுத்த வேண்டியது அதிகபட்ச 03 மணித்தியாலங்களுக்கு மட்டுமாகும்.

III. விரிவுரையில் உள்ளடங்கிய குழுக்கள் பணி மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள் காரணமாக உரிய விரிவுரைகள் மேற்படி கால வரம்பிற்குள் பூர்த்தி செய்வது பிரயோகமற்றது என்ற விடயத்தின் மீது மட்டும், 03 மணித்தியால அதிகபட்ச நேர எல்லையினை மீறி அதிகபட்சம் 06 மணித்தியாலங்கள் வரை கொடுப்பனவுகள் செலுத்த முடியும்.

IV. மேற்கூறியவாறு விரிவுரையின் காலம் 03 மணித்தியாலங்களுக்கு மேல் இருப்பின், அவ் நேர எல்லையை தாண்டி கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு மேற்படி III இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை பூர்த்தி செய்துள்ளதாக நிறுவனத் தலைவர் தனிப்பட்ட முறையில் திருப்தியடைய வேண்டியதுடன், உரிய நேர எல்லைக்குள் விரிவுரைகளின் நடவடிக்கைகள் முடிவு செய்திருத்தல் வேண்டும்.

V. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் அதனை ஒத்த ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின், ஒரு விரிவுரைக்காக வளவாளர்கள் பலரினால் வளப்பங்களிப்பு பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பத்தில், அதிகபட்ச விரிவுரை

காலத்திற்குரிய II, III மற்றும் IV இன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேற்படி சட்டகத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு, உரிய வளவாளர்களிடையே பிரிந்து செல்லும் வகையில் கணக்கெடுத்து, ஒவ்வொரு வளவாளர்களுக்கும் ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவினை தீர்மானம் செய்தல் வேண்டும்.

VI. உள்ளக உத்தியோகத்தர்களை வளவாளர்களாகப் பயன்படுத்தும் போது அவ் கடமை அவர்களின் நிரந்தர கடமைக்கு வெளியக கடமையாக இருந்தால் மட்டும் தமது நிரந்த கடமை நேரத்திற்கு அப்பால் அவ் கடமையில் ஈடுபட்டிருந்தால் மட்டும் மேற்படி கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும்.

VII. ஏதேனும் நிறுவனமொன்று சாதாரண கடமை நேரத்திற்குள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்காக ஏதேனும் பயிற்சித் திட்டத்தினை நடாத்தினால், அதற்கான வளப்பங்களிப்பினை வழங்கும் அவ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு (உள்ளக வளவாளர்களுக்கு) வளவாளர் கொடுப்பனவுகளை செலுத்தப்படக்கூடாது என்பதுடன், சாதாரண கடமை நேரத்திலிருந்து வெளியே அல்லது உரிய நிறுவனத்தின் உத்தியோகத்தர் அல்லாதவர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுமானால், அப்போது அவ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கும் வளவாளர் கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

VIII. அத்தோடு, வளவாளர்களுக்காக உத்தியோகத்தர்களை பயன்படுத்தும் போது உரிய நிறுவன தலைவரின் அனுமதியின் மீது, வளப்பங்களிப்பினை வழங்கும் உத்தியோகத்தர்களின் சாதாரண கடமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம், பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

IX. ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோத்தர்கள் வளவாளர்களாக பயன்படுத்தும் போது, அவர்கள் ஓய்வு பெற்ற சந்தர்ப்பத்தில் வகித்த பதவியின் மீது அடிப்படையாகக் கொண்டு மேற்படி சட்டகத்தில் குறிப்பிட்டுள்ளபடி கொடுப்பனவுகள் செய்ய வேண்டியதுடன், அதிகபட்ச விரிவுரைகளின் நேரத்திற்குரிய மேற்படி II, III மற்றும் IV நிபந்தனைகள் மாறாது நிலவுதல் வேண்டும்.

X. மேற்கூறிய கடமைகளுக்காக வேறு எந்தவொரு கொடுப்பனவும் செலுத்தப்படக்கூடாது.

05. இருப்பிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் அத்தகைய மாதிரியிலான பிற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் போது அதற்கான பங்குபற்றுனர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் வழங்கப்படுமானால், அவ் உத்தியோகத்தர்களுக்கான ஒருங்கிணைப்பு கொடுப்பனவுகளை செலுத்தக்கூடாததுடன், போக்குவரத்து வசதிகள் வழங்கப்படாதிருந்தால் மட்டும் நிலவும் ஏற்பாடுகளின்படி செலவுகளை பெற முடியும்.

06. தங்குமிட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் அத்தகைய மாதிரியிலான பிற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு மற்றும் அதற்கான பொருத்தமான விரிவுரையாளர்களை பயன்படுத்தும் போது தேவையான அனுமதி, அமைச்சரவையின் செயலாளரினால் அல்லது உரிய அதிகாரியினால் பெற்றுக் கொள்வதுடன், அரசாங்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மேற்படி நடவடிக்கைகளை நடாத்திச் செல்வது நிறுவன தலைவரின் கடமையாகும்.

07. வளப்பங்களிப்பு கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் 2025.02.28 ஆம் தினம் வரையில் மட்டும் செல்லுபடியாவதுடன், 2025.03.01 ஆம் தினத்திலிருந்து இவ் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி கடமையாற்றுதல் வேண்டும்.

08. இவ் சுற்றறிக்கை பொதுத்திறைச்சேரியின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2697233
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-vii@pubad.gov.lk